**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No. 292/2023**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | வெள்ளியங்கிரி(PW1) | | |
| Father's Name | சுப்பையா செட்டியார் | தொழில் | |
| Village | சேவூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 60 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd **day of July 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்து போன பிரபாகரன் எனது மகன் ஆவார். கடந்த 03.07.2023 தேதி மாலை 05.30 அளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது மகன் பிரபாகரனின் ஃபோனில் இருந்து அழைத்த ஒரு நபர் லூர்துபுரம் பேருந்து நிறுத்தத்திற்கு பின்புறமாக என் மகன் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது டிராவல்ஸ் வண்டி மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் காயம் பட்ட எனது மகனை அவிநாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் சொன்ன தகவலின் பேரில் நான் அவிநாசி அரசு மருத்துவமனை வந்தபோது என் மகனை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டதாக தகவல் சொன்னார்கள். நான் அங்கு சென்று பார்த்தபோது என் மகன் தீவிர சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இரவு 10.50 மணி அளவில் அவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். மறுநாள் காலை சேவூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

விபத்து சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து புகாரை எனக்கு யார் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் பக்கத்தில் இருந்தவர்கள் எழுதிக் கொடுத்தார்கள். அதில் நான் கையொப்பம் மட்டும்தான் செய்தேன். விபத்தில் என் மகன் காலமானதற்கு நஷ்ட ஈடு கோரி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த விபத்து என் மகனின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும் நஷ்ட ஈடு பெறும் நோக்கத்தோடு எதிரியின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |